# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Cey. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௪] யாழ்ப்பாணம்:- நந்தன வரு தைமீ ௰ உ வெள்ளிக்கிழமை (23 Jan. 1953) [இல - ௭௬]

அரசியல் அலை

## தமிழ் சிங்களப் பல்கலைக் கழகங்கள்

### வட்டுக்கோட்டைப் பிரதிநிதியின் ஆலோசனை

### திரு. சுந்தரலிங்கம் வேண்டாம் என்கிறார்

தமிழ் சிங்களப் பல்கலைக் கழகங்களை நிறுவுவதைப் பற்றி அரசாங்கம் ஆராயவேண்டுமென்று திரு. வீ. வீரசிங்கம் அவர்கள் ஒரு பிரேரணையைப் பிரதிநிதிகள் சபையில் நேற்றுக் கொணர்ந்தபொழுது, கல்வி வளத்தை நாட்டின் பொதுநலனுக்க வேண்டுமென்று கூறிப் பரந்தநோக்கும் விரிந்த கொள்கையுமுடைய பல்கலைக்கழகங்கள் தாய்மொழியில் நிறுவப்பட வேண்டுமென்று சொல்லினர்.

வவனியாப் பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கமவர்கள் இந்த ஆலோசனையைக் கேலிசெய்து வட்டுக்கோட்டைப் பிரதிநிதியிடம் ஒரு கேள்வி கடாவினர். தமிழ் சிங்களம் ஆங்கிலம் என்ற மும்மொழிகளிலும் மூன்று பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படுமேயானால் உமது பிள்ளையை எதற்கனுப்புவீர். கேட்ட மூச்சிலே தான் ஆங்கிலக் கழகத்திற்கே அனுப்புவதாகவும் ஒரு குறிப்பும் கூறினர்.

அந்நிய மொழி ஆதிக்கத்தின் அதிசய விளைவை என்னென்று கூறுவது!

## சாதியை வென்றது காதல்!

### சங்கைப் பிதாச் சொல்லே சரி தரவில்லை!!

பண்டைத்தரிப்பு வாசியும் தாழ்ந்த வகுப்பினருமாகிய திரு. மரியான் பெர்னாண்டு அந்தோனிப்பிள்ளையும் அவ்வூர் திரு. சந்தியாப்பிள்ளை மகள் ரோசாரியோ வயலெட்டும் ஒரு கலவன் பாடசாலையிற் கல்வி கற்று ஒருவர் மீதொருவர் காதல் கொண்டு கரையூரில் வாழ்ந்தனர். மகள் வயலெட்டைப் பெற்றோர் பிடித்துக் கொழும்புக்கு அனுப்பினர். காதலியோ மீண்டும் காதலனையடைந்தார்! காதலியின மாமனாரான சங். பிதா. S. S வில்லவராய சிங்கம் O. M. I. முதலிய முன்னணிப் பெரியோரே முயன்றும் இக் காதற் கட்டை அறுக்க முடியவில்லையாம்! யாழ்ப்பாண நீதிபதியின் வினவுக்கும் காதலனுடன் செல்லுவதை விரும்புபுதாகவே காதலி விடைபகர்ந்தாராம்.

பிரதிவாதிகளின் ஆட்சேபனை என்ன? என்று நீதிபதி விசாரித்தபொழுது சாதியேயென வழக்கறிஞர் கூறினர். தன் சாதியிலிருந்து வயலட் தள்ளப்பட்டாள் என்றுசொல்லக் கேட்டபோதிலும் காதலர்கள் நீதிமன்றத்திலிருந்து புன்னகையுடன் வெளியேறினரென அறியவருகின்றது.

கலவன் படிப்பே!
காதற் சிறப்பே!

## சென்னை எழுத்தாளர் மகாநாடு

### பழைமை தழுவிய புதுமைக்கு ஆதரவு

சென்னையிற் கூடிய எழுத்தாளர் மகாநாட்டைத் திறந்து வைத்த திரு. வி. கலியாண சுந்தர முதலியார் பழைமையைக் கண்டிப்பவர் மனப்பான்மையைக் குறிப்பிட்டு பழைமை புதுமை என்ற கோடிட்ட பாகுபாடுகள் இல்லை என்றும் புதுமை பழைமையைத் தழுவியேயுள்ள தென்றும் அந்நாள் எழுத்தாளர்கள் மதம் மொழி அல்லது வேறெவ்வித குரோத மனப்பான்மையின்றி எழுதி வந்தார்கள் என்றும் கூறினர்.

எழுத்தாளர்களே வேற்றுமையையும் உண்டாக்க வல்லவராதலால் அமைதி அவனியில் நிலவுவதற்கு எழுத்தாளர்கள் உதவியே பெரிதும் வேண்டப்படுவதென்று சொல்லி முதலியார் அவர்கள் இயற்கையில அன்புடையவர்களாக எழுத்தாளர் திகழவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டனர்.

கல்கி ஆசிரியர் திரு. இ. கிருஷ்ணமூர்த்தி எழுத்தாளர் நாட்டபிமானத்தைத் எழுப்புங் கருவிகளாயிருப்பது பண்டைநாட் புலவோரின் நூல்களிற் காணப்படுவதை எடுத்துக் காட்டி இந்நாள் எழுத்தாளர்களை அவ்வழி நிற்குமாறு கேட்டுக்கொண்டனர்.

## தருமையில் மகாகும்பாபிஷேகம்

நிகழும் நந்தன வரு தைமீ 13உ (26-1-53) திங்கட்கிழமை தருமபுரம் அஷ்டாதர புஜமகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்தில் ஆவர்த்த அஷ்டபந்தன மகா கும்பாபிடேகம் நடைபெறுமென்றும் தைமீ 5உ (18-1-53) தொடக்கம் விக்கினேஸ்வர பூசை முதலியன நடக்குமென்றும் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அறியத்தருகின்றார்கள்.

## மது அரக்கன் அகல வேண்டும்!

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் நடந்த கிராமமுன்னேற்றச் சங்க மகாநாட்டிற் பேசும்பொழுது மரவரிச் சட்டத்தை நீக்கி மது அரக்கனை யாழ்ப்பாணத்திலிருந்து முற்றாகவே அகற்றிவிட வேண்டுமென்று திரு. A. T. வேதாபரணம் அவர்கள் உள்நாட்டு மந்திரி திரு. A. இரத்நாயக அவர்களுக்கு ஓர் வேண்டுதல் விடுத்தார்.

## பெரியதேவனத்தாய்-சனசமூகநிலையம்

மேற்குறித்த சனசமூகநிலையத் திறப்பு விழா 17-1-53 சனிக்கிழமை மாலை நான்கு மணிவரையில் திருவாளர்கள்: க. க. முருகேசபிள்ளை, க. நவரத்தினராசா B. A. அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

அரசவாயில் முதலியார் C. தியாகராசா அவர்கள் ஷை கட்டடத்தைத் திறந்துவைத்தார். பண்டிதர் S. கந்தையா அவர்கள் "இலக்கிய இன்பம்" என்னும் பொருளில் சொற்பொழிவாற்றினர்.

ஸ்ரீமதி K. பொன்னுத்துரை B. A. அவர்கள் "கீதையும் வாழ்க்கையும்" என்னும் பொருளில் ஓர் இன்னுரை நிகழ்த்தி இன்பமும், துன்பமும் இயற்கையென்பதையும், அருச்சுனனைப் போர் செய்யுமாறு கிருஷ்ணன் தூண்டிய உறுதிமொழிகளின் ஞானக் கருத்துக்களையும், திறம்பட விளக்கினார்கள்.

சனசமூகநிலைய மேற்பார்வையாளர் திரு. V. P. கணேசபிள்ளை அவர்களும், "சமூகத் தொண்டன்" பத்திராசிரியர் திரு. K. P. முத்தையா அவர்களும் சனசமூக நிலையம் பற்றிய மதிமொழிகள் பல கூறியபின்னர் தலைவர் நிறைவுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## உன்னையல்லால் உள்ளேன் பிறதெய்வம்!

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லாதர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே.

## இந்திய மகாநாட்டு வேண்டுகோள்!

### இலங்கை என் செய்யும்?

ஹைதராபாத்தில் நடந்த இந்திய தேசிய மகாநாட்டிலே இலங்கை இந்தியர் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கையாண்ட முறைகள் அன்னவரை அரசியல் அனாதைகளாக்கி, இலங்கை இந்திய தொடர்பையும் பாதிக்கும் தன்மையனவாகையால் இவற்றை இலங்கை அரசாங்கம் மீட்டும் ஆலோசிக்கும்படி வேண்டி மகாநாட்டாரால் பிரேரணைகள் பிரேரிக்கப்பெற்றன.

இலங்கை அரசாங்கம் என்ன செய்யுமோ?

### ஆனைக்கோட்டை கிராம முன்னேற்றச் சங்கமும் சனசமூக நிலையமும்

மேற்படி சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் 1952ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதி பி. ப. 6 மணியளவில் சனசமூக வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் மேற்படி நிலையத்தின் 1953 வருடச் செயலாளர் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. சுந்தரம் பிள்ளை, உபதலைவர் திரு. வே. சி. நாதன், திரு. சி. கனகசூரியர், காரியதரிசி திரு. சி. ஆறுமுகம், உதவிக்காரியதரிசி திரு. த. பொ. செல்வரத்தினம், தனாதிகாரி திரு. சி. செல்லையா உதவித் தனாதிகாரி திரு. இ. ஞானசம்பந்தர். இவர்களுடன் 16 [illegible] தெரிவுசெய்யப்பெற்றனர்.

## தம்பலகாமம் கோணேஸ்வரர் மகாகும்பாபிடேகம்

தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தில் நிகழும் தைமீ 13உ (26-1-53) திங்கட்கிழமை மகாகும்பாபிடேகம் நடக்குமென்றும், விக்கினேசுவர பூசை கிரியாரம்பம் தைமீ 5உயும் (18-1-53) மகாயாகாரம்பம் தைமீ 11உ (24-1-53) யும் நடக்குமென்றும் ஷை கோவிற் தருமகர்த்தாக்கள் அறியத்தருகின்றனர்.

## காரைநகர்ச் சைவமகாசபை

கடந்த சனிக் கிழமை (10-1-53) மாலை 5 மணியளவில் சைவமகாசபையின் முப்பத்தேழாவது வருடாந்தக் கூட்டம் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் ஸ்ரீ மத். சி சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. வருடாந்த அறிக்கை வரவு செலவுக் கணக்கு வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப் பெற்றன. பின்னர் நிருவாகசபைக்குத் தெரிவு செய்யப்படவேண்டிய ஐவர் சர்வ சம்மதமாய்த் தெரிவுசெய்யப்பெற்றனர்.

அதன்மேல் வித்துவான் கா. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் சங்க காலத்தில் சைவ சமயம் என்னும் பொருளைப் பீடிகையாகக் கொண்டு சைவ சமயத்தின் மாட்சிமையையும் பழமையையும் இனிது எடுத்துரைத்தனர்.

## காதலிகள் கொடுமை நீங்க மணவாளர் சங்கம்

அவுஸ்திரேலியாவிலே மூன்று கணவன்மார் தங்கள் காதலிகளின் கொடுமைகளிலிருந்து நீங்கும் வழியென்னவென்று தம்முள்ளே வாதித்து, வழி பதுவேயெனக் கண்டு ஒரு சங்கமமைத்தனராம், குற்றங்காணும் காதலிகள், கொடும்போர் விளைக்கும் மாமியர், வரவுக்கேற்ற செலவு முறையறியா மனைவியர் ஆகியோரே தங்கள் முன்னணிப் பகைவராய் இச்சங்கத்தார் கொள்ளுகின்றனர்.

இத்தகைய சஞ்சலமுடையோர் தொகை இச்சங்க அங்கத்தவர் கூடுந் தொகையாலறிய வருகின்றது. சங்கம் தொடங்கி இரண்டு மாசங்களுள்ளே மூன்றாயிருந்த அங்கத்தவர் தொகை நூறு நூறாகி நானூறாய் விட்டதாம்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ தைமீ
கo௯. வெள்ளிக்கிழமை

## பல்கலைக் கழகப் பக்குவம் இல்லையாம்...!

=○=

கண் தெரியாதவர் குருடர். அத்தன்மைய உத்தமர்கள் ஐவர் யானைக்கோர் உருவ இலக்கணம் ஒருகால் உரைத்தனர் என்ற பழங் கதை உண்டு. அவ்வாறு அறியாத தொன்றை அறிந்ததாக அறியாமை காரணமாகக் கூறுபவர்கள் இன்று நேற்றல்ல எத்தனையோ தலைமுறையாக இருந்தனர். எனவே இலங்கைப் பல்கலைக் கழக உபதலைவர் தமிழைப்பற்றிப் பழிமொழி பகர்ந்தால் ஆனை உருவம் அமைத்த அந்தகன் கதை ஒக்கும் என எள்ளிவிடுவது சாலப் பொருந்துமெனினும் கல்விச் செருக்கினுற் கண்ணொளி மங்கப் பெற்றவர் கண்ட காட்சிகளைப் பொதுமக்கள் உண்மையென நம்பிவிடுவார்கள் என்ற எண்ணத்தினுல் Sir. ஐவர் ஜெனிங்கஸ்க்குத் தெய்வத் தமிழை இகழ்ந்துவிடுதல் இலகுவானதொரு செயலாகாதென்றெடுத்துக் காட்டுதல் முறையாகின்றது.

சீனமிசிரம் யவனகம் - இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை
ஞானம் படைத் தொழில்
வாணிபமும் - மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு -

அந்நாட்டின் மொழியா பல்கலைக் கழகப் பக்குவம் பற்ருறு இலக்கிய முண்டத்து? அம்ம! என்ன பழிச்சொல்! என்ன புன் உரை.........!

செந்தமிழியற்கை சிவணிய நிலத்
தொடு முந்து நூல் கண்ட

தமிழ்நாட்டமிழ்தமனைய மொழியிலா? அகத்தியம் மாபுராணம், பூதபுராணம், இசைநுணுக்கம் கண்ட நூல் பல கொண்ட மொழியிலா? இலக்கியவளமில்லை? என்னே என்னே இவ்வசையுரை! கடல் கோள் கொண்டமையாற் சிறிது தமிழ் மொழி வறுமையெய்தியதெனினும் எஞ்சிகின்ற சங்க நூல்களின் பரப்பு வரையுமபாற்றதோ? ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம் ஒன்று போதாதா - இயல் நூல் எழிலுக்கு?

இயற்கை இன்பம் எல்லை புரண்டுபாயச் சங்கச் சான்றோர் நலம்பெறவாக்கிய பத்துப்பாட்டு அகம் புறம் கலித்தொகை ஆதியாம் இலக்கியங்கள் எண்ணுக் கடங்குமா!

ஒழுக்கநெறிக்கு உலகில் இனி நூல் ஒன்றில்லை இது போல என்றவகையிற் பன் மொழிகளிலும் பெயர்க்கப் படும் பெருமை வாய்ந்த, ஆராய்ச்சிவல்லுநர் பொன்னெனப் போற்றும் திருக்குறட் பொருட் செல்வம் போற் பொலிந்திடும் நூல் வேறு மொழியில் உண்டுகொல்!

உரையிடையிட்ட பாட்டிடைச் செய்யுளால் உலகிற் சிலப்பதிகாரம் என்னும் தீஞ்சுவைச் செழுநூற்குப் பிறிதுநூல் வகையுடைத்தாகுமா?

நாடிஞ் சொற்சுவை பொருட்சுவை தோய்தரப்பாடும் பணியிற் பொருந்திய கம்பன் கண்ட இராமாயணத் துக்கும்இணையான இலக்கியம்வேறுமொழியிலுண்டா?

சிந்தாமணி இல்லையா, முத்தொளாயிரம் இல்லையா?

இறை நெறியின் நீறிலா வின்பப் பெருவாழ்வு பெற்ற திருத்தொண்டர்கள் தெவிட்டத் தெவிட்டத் தெளித்த செந்தேனனைய அன்புப் பாடல்களாம் தேவாரம் திருவாசகம் எல்லாம் எங்கே?

சிவானுபவச் சீலர்கள் இறை உண்மையை அளவை நூற்படி வகுத்துரைதத சிவஞானபோதம் சிவஞான சித்திச் செல்வமெங்கே?

எழுத்துச்சொற்பொருள் அணியொடு யாப்பாம் ஐவகை இலக்கணம் கண்ட இலக்கியமெங்கே? அரசியலும் அமைச்சியலும், உளநூலும் உடல்நல உரையும் மருத்துவமும் வழக்கியலும் சந்தமும் தருக்கமும் சோதிடமும் செந்தமிழிலில்லை யென்று பல்கலைக் கழக உப அதிபர் எவ்வாறறிந்தார்? கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவென்றுற்ற கலைமடைந்தையே கலங்காநிற்பச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய மானிடருள் ஒருவராகிய இவர் மேனுட்டு மொழிகளில் அரசியலை மட்டும் ஆய்ந்துவிட்டு அண்டசராசரம் அனைத்தையும் அறிந்துவிட்டேன் என்றிறுமாப்புக் கொள்ளுகின்றரே! அதுவும் முத்தமிழ் முழக்கம் மூக்காலும் நடக்கும் உத்தம தமிழ் நாட்டிலா?

நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொண்ட இப்பேராசிரியர் தமது கல்லாமையைக் கற்ருர்முன் சொல்லாதிருந்திருக்கலாமே. இவருடைய ஒட்பத்தை அறிவுடையார் கொள்ளார் என்றிவர் அறிவதே அரிது.

உபஅதிபர் அவர்கள் இன்றே அன்றும் இன்றும் என்றும் புகழுடன் பொலியும் இறை அருட் செந்தமிழை அறிந்தார்வாய்க் கேட்டுணர்வாராக. ஒழுக்கநூற் களஞ்சியமாம் திருக்குறளிற் கல்லாமையைப்பற்றியுள்ள பொருளைத் தேர்வாராக.

நுண்மாண் நுழைபுலம் இல்லான்
எழில் நலம்
மண்மாண் புனைபாவை யற்று,

என்றுங்கு அறி[illegible] தொன்றைப்பற்றி அறி[illegible] தார்போற் பேசி ஒருகாற்

# திருவாதவூர்த் தலயாத்திரை

## திருக்கோயில் நிலைமையும் சிவநெறியொழுக்கச் சீர்கேடும்

மணிவாசகப்பெருமான் இப் மண்மேல் அவதரித்த சிவப்பதியைக் கண்டு மனமாசறுக்க எண்ணி மதுரையிலிருந்து இயந்திர (பஸ்) வண்டியில் ஏறிச் சென்றேம். மேலூரில் இறங்கி மணங்கமழ் மலர்மாலைகளும், பச்சிலைகளும் இறைவன் பூசனைக்காம் என எடுத்துச் சென்றேம். நான்கு கல் தூரத்தைக் கால்நடையாகக் கடந்து அத் தெய்வநிலத்தை அடைய விழைந்தேமாயினும், உலக வாழ்வுக்கு வேண்டிய பாசமூட்டைகள் அதிகமாயிருந்தமையாலும், வழி பாதுகாப்பு அற்றதெனப் பலர் அச்சுறுத்தினமையாலும், மீண்டும் இயந்திர ஊர்திக்காகக் காத்திருந்தோம்.

பகலவன் மேற்கே மறைந்தான். 'பஸ்' வண்டியும் புறப்பட்டது. 'பஸ்'ஸில் ஏறிய ஒரு முதியவரின் ஈகைத் தன்மை எம் மனதைக் கவர, அவரிடம் எதிர்வரும் ஊர்பற்றி உசாவினேம். தாம் அவ்வூரவரே

"ச" வரைவது

என்று கூறித் தங்குமிடமற்றிற்றார் என அஞ்சியிருந்த எம்மைத் தம் இல்லத்தில் இராவைக் கழிக்க அழைத்தார். சிவப்பொலிவெய்திய அம்மண்ணில் இரவு முழுவதும் உடல் படியக் கிடப்பினும் இலாபமே என்று எண்ணிச் சென்ற எமக்கு இதுவும் இறைவன் செயலே எனும் எண்ணம் எழுந்தது. அப்பெரியவர் வீட்டில் எம் இலைகளைச் சுமைகளை இறக்கிவிட்டு இறை வழிபாட்டுக்கு வேண்டியன மட்டும் எடுத்துச்சென்றேம்.

கோவில் இருக்கும் பகுதி கோட்டை என்றழைக்கப்படுகிறது. அப்பால் இருக்கும் ஊரே திருவாதவூர் எனப்படும். கோவில் முன் இருக்கும் திருக்குளத்தில் புறத்தூய்மைசெய்ய இடங் கண்டோம். அகத்தூய்மை தரும் பேரின்பவெள்ளத்தைக் காண உள்ளே விரைந்தேம். தூல லிங்கமாம் திருக்கோபுரத்தில ஒளி வீசும் மின்விளக்கு அவ்வெள்ளத்தில் திளைக்க வருக எனச் செகத்தோரைக் கிரணக் கைகளால் அழைத்தது. இறை கோயிற்பணி செய்வார் எம்மைக் கண்டனர். அர்த்த சாமப் பூசை நடந்த நேரமாயிற்று. மனங் குளிர, இருளகல இறைவனின் அருவுருவத் திருமேனியைக் கண்டோம். அருச்சனை செய்தோம். அம்பாள் தரிசனமும், மணிவாசகர் வழிபாடும் செய்தோம். தல மகிமை பற்றி அர்ச்சகர் சில வார்த்தைகள் சொன்னர். தித்திக்கத் தித்திக்கத் திருவாசகத் தேன் பொழிந்த மணிவாசகர் திருஅவதாரஞ் செய்த ஊரில் திருவாசகம்பாட ஆளில்லையே என்று ஏங்கினேம். ஒட்டி உலர்ந்த தேகமுடையார் ஒரு

சில்லரை வசப்படுத்தினாலும் 'தலைப்பெய்து சொல்லாடச் [illegible]
[illegible]
கூடாது.

வர் ஓதுவாராகக் கடமையாற்றுகின்றுர்.

### வேதாத்தியயனம் வேண்டாமாம்

கோவிலில் தொண்டு செய்வார் பலரும் 'பதில் உத்தியோகஸ்தர்' — 'டெபியூடிகள்' என அறிந்தோம். கோவில் தரும கர்த்தாக்கள் அயலூர்களிலும் உள்ளூர்களிலும் உளர். அவர்கள் மேற்பார்வையாளரை நியமித்துள்ளனர். தேவஸ்தான வேலை நிலையத்தில் கணக்கெழுதுபவர்களும் மேற்பார்வையாளரும் உளர். கோவிலுக்குப் பூசை செய்யும் உரிமை உடைய அர்ச்சகர்கள் மதுரை திருப்பரங்குன்றம் ஆகிய கோவில்களிலும் பூசையுரிமை உடையர். ஆகவே அந்நான்கு பங்காளிகளும் அடுத்த ஜில்லாவிலிருந்து ஒரு முதிய பிராமணரை இங்கு அனுப்பியுள்ளனர். இவர் ஏதோ மாதம் இருபது ரூபா வரையில் ஊதியம் பெறறத் திருப்தியற்று நாட்களைக் கழித்து வருகிருர். வேத அத்தியயனம் செய்ய நியமிக்கப்பட்ட சாஸ்திரிகள், மேற்பார்வையாளர் அபிப்பிராய பேதத்துக்கு இலக்காகியமையால் கோவிலுக்கு இக்கைங்கரியம் செய்ய ஆள் வேண்டியதில்லையென முடிவு கட்டப்பட்டு விட்டதாம். யாராவது சகஸ்ரநாமார்ச்சனை செய்ய விரும்பினுல் அவரைச் சென்று அழைத்து வந்து அவர்க்கு ஊதியம் அளித்தல் வழக்கமாம். அடுத்தநாள் அவரை அழைக்க முயன்றேம். அவர் குளிக்கவில்லையாம், உடல் நலமில்லைப்போலும். மேலும் நிலம்புலம் உடைய அவர் இவ்வித வருவாயை எதிர்பார்த்தும் இருக்கவில்லை. அன்னுர் மகனே தபாற்கந்தோர் அதிகாரியாம். கோவில் ஓதுவார் உரிமையுடைய குடும்பம அயற் கிராமத்திலிருக்கிறதாம். அவர்கட்கு மதுரையில் ஓர் கட்டளைக்கும் பொருட்கள் தரும் பணி இருப்பதால் இலாபம் மிக்க அத்தொண்டைத் தாம செய்துகொண்டு திருவாதவூர்த் திருககோயிலுக்கு

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## வெற்றிகரமாகப் பின்வாங்கியது
# அரசாங்கம்

## அரிசி நெற் போக்குவரத்துக்கு இனித் தடை இல்லை

'இந்துசாதன' ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் அரிசி நெற் போக்குவரதது மட்டுநேரட்டிலும் மாங்குளத்திலும் தடை செய்யப்படுவதை அடிக்கடி எடுத்து அழுத்தத் திருத்தமாகக் காட்டின. மன்னர், வட்டுக்கோட்டை, வவனியா, ஊர்காவற்றுறைப் பிரதிநிதிகள் பலமாக இந்தத் தடையைக் கண்டித்தனர்.

இம்பொழுது உணவு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி குன்காராய்ந்து இத்தடை இருக்கக்கூடாது எனத் தீர்மானஞ் செய்யப்பட்டதாக திரு. A. L. தம்பி ஐயா அவர்களுக்கு கிடைத்திருக்கும்பொழுது கூறினமை குறிப்பிடத்தக்கது. நாட்டரிசி விலையேற இனிக் காரணம் இல்லை.

திருத்தொண்டர் திருநாள்

# இன்பந்தருவது அன்புநெறியே

## கண்ணிடந்தப்பிக் காட்டினுர் நாயனுர்

சைவசமய வாழ்க்கை நெறி, அன்பு, அறிவு என்னும் இரு பிரிவுகளை யுடையது. கண்ணப்ப நாயனுர் எனனுந் திருநாமத்தைப் பெற்ற திண்ணனுர் அன்பு நெறியை விளக்க வந்த அருட்செல்வர்.

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித் தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீறறகே
சென்றூதாய் கோத்தும்பீ.

என்னும் மணிவாசகத்திற் காணக்கிடக்கின்றபடி தமது அன்பு அவரது அன்புக்கு ஒப்பிலது என்று மணிவாசகப் பெருமான் அருளுவாராயின் நாயனுரது அன்பின் தன்மை அறைதற்பாலதோ? "அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவதாரும் அறிகிலார்...."என்றபடி அவரது அன்பு சிவத்தையீந்து அவரைச் சிவமேயாக்கியது. பசு கரணங்கள் பதி கரணங்களாய் மாறின. அதனுலேயே நிண்ணரனது, உமிழ் நீர் திருமஞ்சனமாயமைய அவர் படைத்த இறைச்சி திருவமுதாயமைந்தது. இவரது நிலை அன்பின் சிகரமாய் மிளிர்ந்தது எனபது சொல்லாமலேயமையும். இந்நிலைமை

'அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறிநீ''
என்றருள் செய்தார்,

என்னுஞ் செய்யுளாலறியக் கிடக்கின்றது.

இஃது எமக்கு அறிவுறுத்துவது என்னேவெனில் எம் வாழ்க்கை அன்பு தோய்ந்ததாய் அமைதல் வேண்டும். அஃது வளர்ந்துவந்தே இன்பமாகிய சிவத்தை ஈயும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருவாதவூர்த் - - தலயாத்திரை

2-ம் பக்கத்தொடர்ச்சி

ஒருவரைச் சொற்ப ஊதியமளித்து வைத்திருக்கின்றனர். அவரே மணிவாசகப்பாட உடல்வலியற்றார் போல ஒரு பாடலை மாத்திரம் அவசரமாகச் சொல்லி முடித்துவிடுகிறார் மாலை கட்டும் பணியையும் அவரே செய்கிறார். குருக்களுக்கு உதவுதல், தேவஸ்தான அர்ச்சனைச்சீட்டு விற்றல் ஆகிய கடமைகளும் அவர் தலையிலேயே கிடக்கின்றன. கோவிலுக்குரிய மேளகாரர் ஏதோ தம் கடமையைச் செய்துவருகின்றனர்.

எம் சக்திக்கேற்பத் திருவாசக பாராயணம் செய்தோம். தேவஸ்தானத்தார் மணிவாசகத்தைப் பரப்ப ஒரு வழியையும் கையாண்டிலர். எமக்கு இல்லத்தில் இடம்தந்த பெரியவர் திருவாதவூரர் பிறந்த இடமெனச் சொல்லப்படும் பழம்மனை இருந்த இடத்தை நினைவுகூர்வதற்காகப் பெரும் பணி செய்துளார். ஆங்கிலேயர் ஒருவரே மணிவாசகர் பிறந்த இடத்தைப் பார்வையிட வந்தாராம். நம்மவர் உறங்குகிறோரே என ஏங்கிய அவரும் இன்னும் நல்லார் ஐவரும் கூடி ஆளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தந்து அதன்வருவாய் கொண்டு நடாத்தத்தக்க வகையில் ஒரு சிறு கோவிலும் அமைத்து மணிவாசகப் பெருமானின் கிணறு என வழங்கப்பட்ட பழைய கிணற்றையும் திருத்தியுள்ளனர். அதனடியிற் கிடந்த பழைய உலோகப் பாத்திரங்கள் முதலியன அக்கோவிலில் வைக்கப்பட்டிருந்தனவாம். ஆயின் அவற்றைக் கள்வர் கவர்ந்து கொண்டனராம். வயிறு பசிக்க வாழ்வார் வாதவூரின் ஞாபகச் சின்னங்களின் மகிமையை அறிவரோ?

**கோயிலின் பாழடைந்த நிலைமை**

காலை எழுந்து அப்பழைய பெருங் கிணற்றில் ஸ்நானஞ் செய்து மணிவாசகரின் தனிக கோவிலை வலஞ்செய்து வணங்கினோம். கோவிலில் முற் பகலைக் கழித்தோம். இறைவழிபாடு நிகழ்த்தியபின் அதன் பொருளாதார நிலை முதலிய விபரங்களை விசாரித்தோம். குன்றக்குடி அடிகள் முதலியோரின் தூண்டுதலினால் மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சிறு விளக்கிலும் உபகரித்தோரின் பெயர் காணப்பட்டது. "அறஞ்செய விரும்பு" என்ற ஒளவை வாக்குக்கு "அறஞ் செய்வதைப் பறைசாற்று" என்று இந்தியத் தமிழர் அர்த்தஞ் செய்து விட்டனரோ என்று மனம் வருந்தினோம். ஈடும் எடுப்பும் அற்ற அக்கோயில் முன்மண்டபத்துக் கொடுங்கை வேலையில் இன்று ஒரு சிறுபாகமே தன் பெருமைக்கு எடுத்துக் காட்டாக நிற்கின்றது. முக்காற் பாகத்துக்குமேல் வீழ்ந்து மண்மூடிக் கிடக்கின்றது அந்த நூற்றுக்கால் மண்டபம். சுற்றுப்புறங்களில் உள்ளவர்கள் கடவுள் பக்தியே சிறிதும் இல்லாதவர்களென்றும், பிறநாட்டார் யாராயினும் எப்பொழுதாவது வந்தால், கோவிலிற் காணஞ் செலுத்துவர் என்றும் குருக்கள் முறையிட்டார்.

கோவிலின் புறத்தோற்றம் எம் மனதைக் கலங்க வைத்தது. காலதேவதை அதன் அழிந்துபோன பாகங்களிற் றோன்றிப் புன்னகை புரிந்தாற் போலிருந்தது. எம் சமயம் இன்று இருக்கும் நிலையின் நிழற்படமே அங்கு தெரிந்தது. வீழ்ந்து கிடந்த மண்மூடிய கல் ஒவ்வொன்றும் எம் மனத்தில் ஓர் பெரிய வினாக்குறியைப் பதிய வைத்தது. சைவத் தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் அவை வினாக்களை விடுக்கின்றன.

**கரியமனங் காட்டுங் கரியகொடி**

வெளியே வந்தோம். திருவாதவூரின் நடுமத்தியிலே வானுற ஓங்கிநிற்கும் மெல்லிய கம்பத்திலே கறுப்புக் கொடி ஒன்று ஆடிக்கொண்டு இருந்தது. சூரியனைக் கௌவிய கேதுவெனக் காட்சியளித்தது அது. திராவிட இனத்தை உய்யவைக்க வந்த கூட்டத்தாரின் கொடியாம் அது. இலௌகிகப் போட்டிகளில் மூழ்கித்திளைக்கும் தமிழ் மறவரின ஆதரவுடன் வாழ வழி தெரியாத எளிய மக்களை அரசியற் சந்தர்ப்பவாதிகள் ஒன்று திரட்டியுள்ளனர் அக் கொடிக்கீழ். பணப்பேய் பிடித்த மாந்தர் அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்து அறவழி நீங்கவே; மற்றையோரும் மறவழி வகுத்து ஆதிக்கம் பெறப் போரிடுகின்றனர். தமிழகத்தைப் பிடித்த கரும்பிணி மணிவாசகப் பெருமான் ஊரானையும் பிடித்துள்ளது. இப்பணிக்கு மருந்துகாண முயல்வோர் மிகமிகச் சிலரே, திருவாரூர் நிலைமையைத்திருத்தச்சிவநெறியாளர்கள் சிந்திப்பார்களா?

—


யாழ்ப்பாணம் – வண்கிழக்கு,

பொ. கா. தாமோதரம்பிள்ளை கடையில்

## வெந்தீசு விற்பனவு

| நம்பர் | உ. மீ ஆ. | கொடுத்த ரூபாய் | ஊர் பெயர் நகை விபரம். | உருப்படி |
|---|---|---|---|---|
| 4850 | 13 8-51 | 300 — | மண்டதீவு சின்னத்தம்பி கந்தவனம் வளையல் காப்பு சோடி | 1 |
| 4947 | 24-9-51 | 50 — | K.K.S. ரோடு 292 கி. சுப்பையா பத்தர். துரை சிகில்மோதிரம் | 1 |
| 4987 | 15-10 51 | 25 — | அராலிதெற்கு செல்லப்பா சுப்பிரமணியம் இமி. வெ.சி.கல் தோடு சோடி | 1 |
| 5048 | 22-11-51 | 8 — | நீராவியடி 74/2 கி. செல்லையா சிவசின்னம் ஆடுதன் மோதிரம் | 1 |
| 5088 | 4 12-51 | 100 — | கஸ்தூரியார் ரோடு 109 கி. K. P. A. சில்வா கை வாச்சு சங்கிலி | 1 |
| 5101 | 10-12-51 | 125 — | புத்தூர் மேற்கு கந்தையா தம்பு கொக்கி இல்லாத சரட்டுக் கொடி | 1 |
| 5136 | 12-1-52 | 50 — | மானிப்பாய் கட்டுடை சிவரெத்தினம் பொன்னம்மா இமி. கல். புரோச்சு ஒரு கல் இல்லை | 1 |

வெந்திஸ் விற்பனவு

14—2—1953 சனிக்கிழமை

S. Pasupatby Chettiar,
Auctioner & Broker.

M. 226. 23, 27—1—53.



## சிறந்த கொழுக்கி ஓடுகள்

பேசல் மிசன் கோட்டை மார்க் கொழுக்கி ஓடுகளே மற்றை எல்லா ஓடுகளிலும் சிறந்தவை. எப்படி மழை பெய்தாலும் கசிந்தொழுகமாட்டா, வெயில் மழைகளினால் பங்கப்படாது நீடித்தகாலம் பாவிக்கக்கூடிய திண்மை உடையன!

கிடைக்குமிடம் :

வில்லியம் மேதர் சன்ஸ்,
சோல் ஏஜென்ஸ்,
யாழ்ப்பாணம்.

[M. 225. 23—24-4-53.]


## சைவத் தமிழ் அன்பர் கழகம்

——

தைப்பொங்கல் திருநாள் பி. ப. 5 மணியளவில், சாவகச்சேரி "நாகேசுவரி" வித்தியாசாலையில் சைவத் தமிழ் இளைஞர் பலர் அடங்கிய கூட்டத்தில் இக்கழகம் அமைக்கப் பெற்றுள்ளது. சிறப்பாக இளைஞர் முன்னேற்றத்தையும், பொதுவாகக் கிராம நலத்தையும், "சைவத்தமிழ்" முன்னேற்றத்தையும் விரும்பி இக்கழகம் தொண்டாற்ற வேண்டுமென, ஆரம்ப கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது. பின் வருபவர்கள் கழகத்தின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப் பெற்றனர்.

தலைவர்: ஆசிரியர் திரு. A. சண்முகரத்தினம் அவர்கள், பொதுக் காரியதரிசி: திரு. செ. சுப்பிரமணியம், தனாதிகாரி: திரு. மூ. மருதையனார், திருவாகசபை அங்கத்தவர்கள்: திரு V. தனையசிங்கம், திரு. M. S. திருநாவுக்கரசு, திரு. S. ஆறுமுகம், திரு. S. குணரத்தினம், திரு. S. திருநாவுக்கரசு, திரு. T. கனகநாதன், திரு. M. கோபாலபிள்ளை.

## பயன் கருதாப் பணி

### திரு. ஈ அருளம்பலமவர்களின் அறிவுரை

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் வித்தியாதரிசி பதவியிலிருந்து இளைப்பாறுகின்ற திரு. ஈ. அருளம்பலமவர்களுக்குத் தென்மராட்சி ஆசிரியர் ஓர் பிரியாவிடையளித்தனர்.

அத்தருணம் பேசும்பொழுது ஆசிரியர்கள் அச்சமின்றி எப்பொழுதும் பயன்கருதாப் பணி செய்ய வேண்டுமென்று, அறிவுரை கூறினர்.

## உங்கள் நக்ஷத்திரம் ?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள் 25—1—53——31—1—53**

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் சித்தி பெறுதற்கு அதிகம் முயலவேண்டும். மனச் சமாதானமிராது செலவும் அதிகரிக்கும். கடல் கடந்த இனத்தவரிடமிருந்து வார இறுதியிற் சில நல்ல செய்திகள் வரும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரும். அன்னியர் அதிக உதவியாயிருப்பர். வார இறுதியில் சில நினைவு வேறுபாடுகள் குடும்பச் சூழலில் உண்டாகக்கூடும். வாக்குவாதத்தன்மையை நீக்குக.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்த வாரந் தொடக்கம் உமது தேகசுகம் திருந்தவேண்டும். பணவிலையில் திருத்தத்துக்குமிடமுண்டு வார இறுதிக்கு முன் சில நல்ல புதினங்கள் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்த வாரம் அவமானமுண்டாக்குவோரைப்பற்றிக் கவனமாயிருக்கவும். சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. ஆனால் பெரும் பிழையான விளைவுகளுக்கு இடமில்லை. எந்த ஒரு விசேட காரியத்திலும் அவசரப்பட்டு பிடிகொடுக்க வேண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.

இந்த வாரம் விரைந்து சண்டை தொடுப்பீர். குடும்பச் சூழலில் எண்ணப் பிழைகளுக் கிடமுண்டு. வார இறுதிக்கு முன் உமக்கு எதிராய் வேலை செய்த ஒருவரைக் கண்டு பிடிப்பீர்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.

இந்த வாரம் அவமானம் ஆக்குவோர் உம்மை நிலைகுலைக்கக்கூடும், குடும்பச் சமாதானமிராது. ஆனால் நடுவாரத்திலிருந்து தேகசுகம் திருந்தக்கூடும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

ஞாயிறும் திங்கள் காலையும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக் கூடும். உத்தியோகத் தொந்தரவுகளுக்கும் சுகவீனத் துக்குமிடமுண்டு. செவ்வாயின் பின் திருத்தம் நிச்சயம். புது முயற்சிகளை கவனமாய்க் கையாள வேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் சில விசேட காரியங்களில் தீர்மானஞ் செய்வதில் வருந்துவீர். திங்கள் மாலை, செவ்வாய், புதன் காலை கவனமாய்க் கழிக்கவேண்டும. வாரத்தின் பிற்பகுதி புது முயற்சிகளிற் சித்தி தரும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

இந்த வாரம் புது முயற்சிகளில் அதிக இலாபம் பெறுவீர். சமூக சித்தியும் புகழும் நிச்சயம் உம்முடைய காரியங்களில் இனத்தவர் உதவி செய்வர். ஆனால் இறுதி மூன்று நாட்களும் அதிக தடுமாற்றங்களை உண்டாக்கக்கூடும்.

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உத்தியோகத்தில் அல்லது வியாபாரத்தில் கடைசி நாளைத்தவிர இந்த வாரம் நல்ல பலனைத் தரும். சகோதரர் அல்லது சகோதரிகளைப் பற்றிச் சில சந்தோஷமான செய்திகளை அறிவீர், வாரத்தின் கடைசி நாள் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

இந்தவாரம் அலுவல்களை ஒழுங்கு செய்தல் அதிகம இலகுவாயிருக்கும். புது முயற்சிகளிற்சித்தியும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம், சில விசேட காரியங்களைக் கையாளும்பொழுது நண்பர் அதிகம் உதவியாயிருப்பர்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்த வாரம் சமூக சித்தியும் புகழும் நிச்சயம். காத்திராத இலாபத்துக்கும் இடமாற்றத்துக்கும் அல்லது உத்தியோக உயர்ச்சிக்குமிடமுண்டு. புது முயற்சிகளை முன்னேற்றுக.

## வண்ணை வைத்தியேசுவரசுவாமி கோயிற் கும்பாபிஷேகத் திகதி மாற்றம்

இக்கோயிற் கும்பாபிஷேக தினத்தை (26—1—53) திங்கட்கிழமை என்று இருந்ததை இப்பொழுது மாற்றி (25—1—53) ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் செய்வதாகத் திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருக்கின்றோம் என்பதை இதனால் எல்லாருக்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

வை. கந்தப்ப செட்டியார்

16—1—53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதக வயிற்றுவலி சொல்லாமலே பறக்கும்!

**கர்ப்பஎண்ணெய்சாப்பிட்டால்**

மாதவிலக்குக் காலத்தில் உண்டாகிற சூதகக்கட்டு, உடல் கனம், கைகால் குடைச்சல், வயிற்றுவலி முதலியவைகளைக் குணப்படுத்துகிறது. அகாலப்பிரசவத்தைத் தடுத்துக் கர்ப்பமுண்டாக்குகிறது. அனுபவமானது.

புட்டி 1-க்கு விலை ரூ. 3-0-0.

ஏஜண்டு: S: பொன்னுச்சாமிபிள்ளை,
133 தும்பகொடா தெரு, பலாங்கொடை

(௫)

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.



| திறமான | திறமான |
|---|---|
| **தேக்கமரங்கள்** | **ருணிமார்க்ஓடுகள்** |
| பல திணிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்காபரணத்திற்கேற்ற ... 

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=0=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்,



**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.


— வண்ணை —

# வைத்தியேசுவரசுவாமிகோவில்

இவ்வாலய புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தின்பொருட்டு திருக்கழுக்குன்றம் பிரம்மஸ்ரீ சி. சந்திரசேகரக் குருக்கள T. C. தியாகராஜக்குருக்கள் திருவீழிமிழலை சோமசுந்தரக் குருக்கள், மு. சுப்பிரமணியக்குருக்கள், திருநெல்வேலி ச. சுப்பிரமணியபட்டர் ஆகியவர்களும் நெடுங்காலம் இவ்வாலயத்து அர்ச்சகராயிருந்து இப்போது ஜிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோவில் பிரதம அர்ச்சகராகவிருக்கும் பிரம்மஸ்ரீ சு. சிவகடாக்ஷக் குருக்கள் முதலிய சிவாசாரியர்கள் இங்கு வந்துள்ளார்கள். இவர்களுள் பிரம்மஸ்ரீ சி. சந்திரசேகரக்குருக்கள் அவர்களே சர்வசாதகம் என்னும் தலைமை ஆசாரியராகவிருந்து சகல கிரியைகளையும் நடாத்தி வருகின்றார்கள்.

சென்ற சனிக்கிழமை மாலை வேம்படி விநாயகராலயம் என வழங்கும் கடையடிப் பிள்ளையார் கோவிலில் விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெற்றபின் இவ்வாலாம்பிகா சமேத வைத்தியேசுவரசுவாமியிடம் அநுக்ஞை எனப்படும் உத்தரவு பெறுதலாகிய மங்கலக்கிரியையும் விதிப்படி நடைபெற்றது. மறுபடி வண்ணார்பண்ணை வடகிழக்கில் இருக்கும் இத்தேவாலயத்துக்குச் சொந்தமான ஐயனார் கோவிலில் விசேஷ அபிடேக ஆராதனைகள் செய்யப்பெற்றன. பின் பத்திரகாளி கோவிலில் கிராம தேவி சாந்தி எனப்படும் பூர்வாங்கக் கிரியைகள விசேட அபிடேக ஆராதனைகளுடன் நடைபெற்றன.

மறுநாள் பகல் இவ்வாலயத்தில் கணபதி ஹோமமும் இரவுபிரவேசபலியும், ரக்ஷோகண ஹோமமும் விதிப்படி நடைபெற்றன.

திங்கட்கிழமை காலை ஆசாரியர்களை வரித்த ஆனபின் அஷ்டலக்ஷ்மி என்னும் தனபூசை இனிது நடைபெற்றது.

20—1—53: செவ்வாய் பகல் நவக்கிரகசாந்தி, இரவு வாஸ்து சாந்தி;

புதன் காலை மிருத்சங்கிரகணம்; இரவு அங்குரார்ப்பணம்;

வியாழன் காலை ரக்ஷா பந்தனம், யாகசாலங்காரம்; இரவு கலாகர்ஷனம், யாகாரம்பம்;

வெள்ளி காலை மாலை யாகப் பூர்ணாகுதி;

ஏனைய கிரியைகளெல்லாம் தொடர்ந்தநடைபெறுகின்றன,

### கதாப்பிரசங்கம்

முத்தமிழ் மணி பிரம்மஸ்ரீ C. S. S. மணி ஐயரவர்களால் சென்ற சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் "பார்வதி பரிணயம்" என்னும் விஷயத்தில் கதாப்பிரசங்கம் செய்யப்பெற்றது. தினந்தோறும் மண்டலாபிஷேகம் வரையில் தொடர்ந்து மேற்படி ஐயரவர்களால் கதாபிரசங்கம் செய்யப்படும்.

M. 224 23—1—53.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
காரம்பன் இராமுப்பிள்ளை செல்லையா கைம்பெண் பாக்கியம்
வழக்காளி.

இல. 7545 எதிராக

1. வேலணை மேற்கு சங்கரப்பிள்ளை பொன்னையா
2. பெண் சிவக்கொழுந்து.
3. சங்கரப்பிள்ளை விசுவலிங்கம்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7545-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணி 1953ஆம் மாசிமீ 17உ செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2535-35ம் ரூபா: 2000/=க்கு 19.2-51 தொடக்கம் 5-8-52 வரை 12 வீதமான வட்டியும் இதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா: 250-20 சதம்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி. வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "கன்னியம்பிட்டி" பர. நெ. இல- 13¾ எல்லை கிழக்கு மனுவேற்பிள்ளை பெண் சிசிலியாமில்றெட் கொன்ஸ்ரான்சின் உடைய ஆதனம் வடக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலாதனம், மேற்கு பிரான்சிஸ் பிள்ளை ஏபிரகாம்பிள்ளைக்குரிய வாதனம், தெற்கு வெனடிக்ற் பெண் இராசம்மாவிற்குரிய வாதனம். இதடங்கலும்,

2. ஷை வேலணை மேற்கிறை "துவரைநின்றகலட்டி" பர. நி. இல- (10) பத்தும் வீடுகளும் கிணறும், பனைகளும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசர் சின்னையாவிற்கும் சகோதரனுக்குமுரியவாதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு முருகர் கைம்பெண் மூத்தாச்சிக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள், தெற்கு சங்கரப்பிள்ளை கைம்பெண் தையலம்மைக்கும் பிள்ளைகளுக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள்.

1953-ம்ஆ தைமீ 16-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.

M. 222 23—1—53,

## நன்றி கூறுகின்றேம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை எமது புதல்வன் செல்வச்சிரஞ்சீவி, இராமச்சந்திர சர்மாவுக்கு, ஆனைக்கோட்டை காப்பிரான் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற உபநயன வைபவத்தில், எனது அழைப்பிற்கிணங்கி ஆங்கு வந்திருந்து சபையைச் சிறப்பித்து ஆசிவழங்கிச் சன்மானித்த குருக்கள்மார் கோயில் ஏஜமானர்கள், சுற்றமித்திரர் முதலானோர்க்கும், தூரித்த ஊர்களிலிருந்து சன்மானம் ஆசிசெய்துள்ள அபிமானிகட்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலை ஏற்றுக்கொள்ளும்படி இப்பத்திரிகை வாயிலாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
பொ. சோமசுந்தரக்குருக்கள்
ஆதீன அர்ச்சகர்,
ஆனைக்கோட்டை
காப்பிரான் பிள்ளையார் கோவில்
23—1—53

M. 223 23—1—53.

## சித்தங்கேணி - வட்டு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கமும் சனசமூக நிலையமும்

ஞாயிற்றுக்கிழமை (9-1-53) மாலை 6 மணிக்கு மேற்படி சங்கங்களின் வாசிகசாலையும் நூல்நிலையமும் தலைவர் திரு. N. கனகசபாபதி அவர்களால் பிள்ளையார் கோவில் மடத்தில் திறந்து வைக்கப் பெற்றன. பெருந்திரளான மக்கள் சமூகமளித்தனர். ஓய்வு நேரத்தை நல்ல வழியிற் பயன்படுத்துமாறு அவர்களைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டுப் பிரார்த்தனை ஒன்று ஆரம்பிக்கப்பெற்றது. திரு. C. S. S. மணிஐயர் அவர்கள் விநாயகர் வழிபாட்டு முறைக் காட்சிபொனறைக் காட்டினர். கதாப்பிரசங்கத்துடன் நிகழ்ச்சிகள் நிறைவெய்தின.

## திருகோணமலையில் பொங்கல் விழா

திருகோணமலை திருவள்ளுவர் கழகத்தினால் இந்துக்கல்லூரி மண்டபத்தில் 14-1-53 புதன்கிழமை பொங்கல் விழாக் கொண்டாடப்பட்டது. நகரசபைத் தலைவர் திரு. த. ஏகாம்பரம் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்கினார்கள். திருமதி. க. இராசநாயகி, திரு. பொ. கணநாதபிள்ளை B. A., திரு. இ. சுப்பிரமணியம், பாராளுமன்ற அங்கத்தவர் திரு. க. இராஜவரோதயம், கழகப் புலவர் திரு. பெ. பொ. சிவசேகரனார் ஆகியோர் பொங்கல் விழாவின் மகத்துவத்தைக் குறித்து மிகச் சிறந்த முறையில விரிவுரைகள் ஆற்றினர். தக்ஷணாமானசபா மாணவிகளால இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது. திருவள்ளுவர் கழக அங்கத்தவர்களாகிய திரு. அ. குலவீரசிங்கம், திரு. க. சண்முகலிங்கம் என்பவர்களால் வள்ளுவ கீதங்கள் பாடப்பட்டன. கழகப் புலவர் திரு. பெ. பொ, சிவசேகரனார் திருவள்ளுவர் கழகம் கொழும்பிலுள்ள தமிழ்மறைக் கழகத்தினரின் முதலாவது திருக்குறள் மகாநாட்டைத் திருகோணமலையில் வைகாசி மாதத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்து வருவதாகக் கூறி அதற்கு யாவருடைய ஒத்துழைப்பையும், பொருளுதவியையும் அளிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். தலைவரின் முடிவுரையோடு விழா இனிது நிறைவேறியது.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond residing at 245: Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday January 23 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org